செ.வெ. எண்: 269 நாள்: 25.04.2012

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (25.4.2012) தலைமைச் செயலகத்தில், தேனி–குமுளி நெடுஞ்சாலை, லோயர் கேம்ப்பில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய வளாகப் பகுதியில் 1 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் முல்லைப் பெரியாறு அணையை உருவாக்கிய ஆங்கிலேய பொறியாளர் கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களின் வெண்கல திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மணிமண்டபம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

முல்லை பெரியாறு அணையினால், தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் ஆகிய தென் தமிழக மாவட்டங்கள் தமிழ்நாட்டு மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்யும் மழைநீர் முல்லை ஆறு மற்றும் பெரியாறு என்ற ஆறுகளாக மேற்குப் புறமாக கேரள மாநிலத்தில் ஓடி, அரபிக் கடலில் வீணாகச் சென்று கலப்பதை கிழக்குப் புறமாக திருப்பி விடுவதன் மூலம், வைகை நதி நீரை மட்டுமே நம்பியுள்ள பல லட்சம் ஏக்கர் வறண்ட நிலங்கள் விளை நிலங்களாக மாறும் எனக் கருதி, பெரியாற்றின் குறுக்கே அணை ஒன்றினை கட்ட ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ராணுவப் பொறியாளராக இந்தியாவிற்கு வந்த கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்கள் திட்டமிட்டார். கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்கள் பல்வேறு இன்னல்களையும் பொருட்படுத்தாமல், மூன்று ஆண்டுகளில் அணை, பாதி கட்டப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் தொடர்ந்து பெய்த மழையினால் உருவான வெள்ளத்தினால் கட்டுமானப் பணிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டது. மேலும், ஆங்கிலேய அரசின் நிதி ஒதுக்கீடு குறிப்பிட்ட காலக்கட்டங்களில் கிடைக்காததால் கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்கள் இங்கிலாந்து சென்று தனது குடும்ப சொத்துக்களை விற்று, அதன் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு, முல்லைப் பெரியாறு அணையை 1895 ஆம் ஆண்டில் கட்டி முடித்தார். இதனால் தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள 2.23 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதியினை பெற்று வருகின்றன. தென் தமிழகத்தின் வளத்திற்காக முல்லைப் பெரியாறு அணையை பல்வேறு இடர்பாடுகளுக்கிடையே உரிய காலத்தில் கட்டி முடிப்பதற்காக தனது சொந்த நிதியினையும் செலவு செய்த கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களது நினைவை நன்றியுடன் போற்றும் வகையில் தேனி–குமுளி நெடுஞ்சாலையில் லோயர் கேம்ப் என்னும் இடத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சொந்தமான நிலத்தில் அவருக்கு வெண்கல திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மணிமண்டபம் அமைக்கப்படும் என்று 8.1.2012 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, இன்று தேனி–குமுளி நெடுஞ்சாலையில், லோயர் கேம்ப்பில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய வளாகப் பகுதியில் 1 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களின் வெண்கல திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மணிமண்டபம் அமைக்கும் பணிக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

இந்நினைவு மண்டபம், அலங்கார நுழைவு வாயில், அலங்கார தேக்குமரக் கதவுகள், வெண்கல வார்ப்பு எழுத்துக்கள் கொண்ட பெயர்ப் பலகைகள் ஆகியவைகளுடன் எழில்மிகு தோற்றத்தில் பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையில் அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், பொதுப் பணித்துறைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 25.4.2012